DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender Miscellaneous : **CC.No. 147 /2025**

Preliminary Register :

Sessions :

Deposition of witness for : Pw.1

Name : முகமது அப்துல்லா
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day February of 2026

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:-**

1. நான் தற்போது மதுரை டிவிஎஸ் நகரில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான் மதுரை டிவிஎஸ் நகரில் உள்ள செய்யது பீடி கம்பெனியில் கிளை மேலளாராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் நிறுவனம் அரசாங்க வழிகாட்டுதலின் படி டிரேட் மார்க் பெறப்பட்டு செய்யது பீடி பெயரில் விற்பனை செய்து வருகிறோம். ஆவியூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் எங்கள் நிறுவனத்தின் விற்பனை சற்று குறைந்திருந்தது. அதனால் 11.05.2022 ம் தேதி நான், அக்னிராஜ், அசன்னார், முத்துகிருஷ்ணன், செந்தில்குமார் ஆகியோர்கள் காலை சுமார் 9.00 மணியளவில் ஆவியூர் டிவிஎஸ் நிறுவனம் அருகில் உள்ள கடம்பங்குளம் சாலையில் நின்று பேசிக்கொண்டிருந்த போது அப்போது ஆஜர் எதிரி TN 67 BD 7130 என்ற ஹோண்டா ஆக்டிவ் இருசக்கர வாகனத்தில் காரியாபட்டிலிருந்து கடம்பன்குளத்திற்கு செல்லும்

போது கடம்பன்குளம் பிரிவு ரோட்டில் அவர் திரும்பும் போது வண்டியின் பக்கவாட்டில் எங்கள் நிறுவனத்தின் பீடியை (8 சிறிய பண்டல்கள், ஒவ்வொன்றிலும் 20 சிறிய கட்டுகள்) வைத்திருந்ததால் நாங்கள் அனைவரும் எங்கே இருந்து பீடியை வாங்குகிறீர்கள் என்று கேட்டதற்கு அவர் இது போலி லேபிள் ஒட்டிய பீடி என்றும், பணம் மலிவாக கிடைத்ததால் அதை வாங்கியதாக கூறினார். பின்னர் அவற்றை சிறு கடைகளுக்கு கம்பெனி விலையில் கொடுப்பதாக கூறினார். பின்னர் நாங்கள் அனைவரும் எதிரியையும் அவர் வைத்திருந்த பீடியையும் அவரது இருசக்கர வாகனத்திலேயே ஆவியூர் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று பீடியையும் அவரையும் ஒப்படைத்தோம். பின்னர் நான் நடந்த சங்கதியை கூறி புகார் மனு அளித்தேன் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு **அசா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் தான் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட போலி லேபிள் ஒட்டப்பட்ட பீடிகளாகும். அந்த புகைப்படங்கள் (எண்ணம்–2) **அசா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் தான் எதிரி இயக்கி வந்த இருசக்கர வாகனம் ஆகும். அந்த புகைப்படங்கள் (எண்ணம்–8) **அசா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

எங்களது நிறுவனம் சட்டப்படி அங்கிகரீக்கப்பட்ட நிறுவனம் என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் மனுவில் எங்கள் நிறுவனத்தின் தலைமையிடம் எதுவும் என்று கூறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை, ஆனால் நான் எந்த அலுவலகத்தில் வேலை பார்த்தேன் என்று குறிப்பிட்டுள்ளேன். வழக்கு சம்மந்தமாக காவல் துறையினர் எந்த எந்த தேதிகளில் என்னை விசாரித்தார்கள் என்றால் புகார் மனு அளித்த போது என்னை விசாரித்தார், பின்னர் அடுத்த நாள் என்னை விசாரித்தாரகள். நான் அளித்த வாக்குமூலத்தை பெற்றுக்கொண்டு அதில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். என்னுடன் வந்த பிற நபர்களை எப்போது போலீசார் விசாரித்தார்கள் என்றால் புகார் அளித்த போதும் மட்டும் தான் விசாரித்தார்கள், அடுத்த நாள் நான் மட்டும் தான் சென்றேன், அவர்கள் வரவில்லை. மற்ற நபர்கள் யாரிடமாவது போலீசார் கையொப்பம் பெற்றார்களா என்றால் எங்களுடன் வந்த ஒரு நபரிடம் கையொப்பம்

பெற்றார்கள், ஆனால் யார் அந்த நபர் என்று எனக்கு சரியாக ஞாபகமில்லை. எதிரியை முதன் முதலில் பார்த்த போது எத்தனை நபர்கள் இருந்தோம் என்றால் என்னுடன் சேர்த்து மொத்தம் 5 நபர்கள் இருந்தோம். ஏன் திடீரென்று அந்த வழியே வந்த எதிரியை மட்டும் அழைத்து கேட்டோம் என்றால் ஏற்கனவே ஒருமுறை எதிரி இவ்வாறு செய்ததால் அவரை எச்சரித்து அனுப்பினோம். எதிரி மீண்டும் அதே போல் செய்ததால் அவரை விசாரித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். எதிரி ஒரு சிற வியாபாரி என்றால் சரிதான். எதிரி அவரது வாகனத்தில் என்ன என்ன பொருட்கள் வைத்திருந்தார் என்றால் பீடிகள், முறுக்கு மற்ற திண்பண்டங்கள் வைத்திருந்தார். நான் எதிரி வைத்திருந்த பீடியை பார்த்தவுடனே போலி என்று கண்டுகொண்டேன் என்றால் சரிதான்.

எதிரி காவல் நிலையத்திற்கு அவராகவே வந்துவிட்டாரா அல்லது நாங்கள் அழைத்து சென்றோமா என்றால் அவரை காவல் நிலையம் வரசொன்னோம் அவர் தானாகவே வந்தார். எதிரி விசாரணைக்கு ஒப்புக்கொண்டார் என்றால் சரிதான். எதிரி கொண்டு வந்த பீடி கவர்களை நாங்கள் திறந்து பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி கொண்டு வந்த பொருட்கள் எப்படி இருந்ததோ அவ்வாறே காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டோம். நான் காவல் நிலைய அதிகாரிகளிடம் எங்கள் நிறுவனத்தின் காப்புரிமை அசலை கொடுக்கவில்லை என்றால் நகலை மட்டும் தான் கொடுத்தேன். நான் எதிரி கொண்டு வந்த பொட்டலங்களை தொட்டு பார்த்த போது உள்ளே பீடி இருப்பது போல் தெரிந்தது, ஆனால் அதில் ஒட்டப்பட்டிருந்த லேபிள்கள் போலியாக இருந்தன. எங்கள் நிறுவனத்தை சேர்ந்தவர்கள் எதிரி கொண்டு வந்த பீடிகள் போலி பீடிகள் என்பதை உறுதி செய்த அதை சாம்பில் எடுத்து லெபார்லிட்டிக்கு எதுவும் அனுப்பினோமா என்றால் நாங்கள் புகார் மனு கொடுத்துவிட்டோம், எங்கள் நிறுவனத்தின் அசல் பீடியையும் கொடுத்து போலீசாரிடம் நடவடிக்கை எடுக்க சொல்லி கேட்டுக்கொண்டோம். எங்கள் நிறுவனம் தயாரிக்கும் பீடிக்கு டிரெட்மார்க் எதுவும் உள்ளதா என்றால் நம்பர்.374251, 374252 என்ற டிரெட்மார்க் உள்ளது , காப்புரிமை எண்.37053/82, 37040/82. எங்கள் நிறுவனத்தின் டிரெட்மார்க், காப்புரிமை பற்றி செய்திதாளில், அரசு இதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யப்பட்டிருக்கும், ஆனால் எப்போது செய்யப்பட்டிருக்கும் என்று எனக்கு

தெரியவில்லை. காவல் நிலையத்திலிருந்து எனக்கு சம்மன் எதுவும் அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். அசா.ஆ.2 மற்றும அசா.ஆ.3 பற்றி என்னிடம் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எங்கள் நிறுவனத்திற்கு என்று அங்கிகரீக்கப்பட்ட journal No.1861 என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. மேலே சொன்ன தகவல் எனக்கு தெரியாததால் எனக்கு சாட்சியம் அளிக்க தகுதி இல்லையென்றால் சரியல்ல, எனது மேலிடத்திலிருந்து எனக்கு விசாரணை செய்யவும், புகார் அளிக்கவும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. எதிரி வரி ஏய்ப்பு செய்துவிட்டதற்கு ஆதரவாக நான் ஆவணம் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். எதிரி கொண்டு வந்த பொருட்கள் உண்மையானது தான் என்றும், நான் எதிரி கொண்டு வந்த பொருட்களை ஒப்பீட்டு சோதனை செய்து பார்க்காததால் எதிரி மீது பொய்யாக வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender Miscellaneous : **CC.No. 147 /2025**

Preliminary Register :

Sessions :

Deposition of witness for : Pw.2

Name : **செந்தில்குமார்**
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day February of 2026

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:–**

நான் தற்போது மதுரை டிவிஎஸ் நகரில் வசித்து வருகிறேன். நான் செய்யது பீடி கம்பெனியில் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அசா.1 எனது கம்பெனியின் மேலாளர் ஆவார். கடந்த 11.05.2022 ம் தேதியன்று காலை சுமார் 9.00 மணியளவில் நான், அசா.1, அக்னிராஜ், அசன்னார், முத்துகிருஷ்ணன் ஆகியோர்கள் ஆவியூர் அருகே விற்பனை குறைவாக இருப்பதால் அந்த பகுதியில் விசாரணை செய்ய சென்றோம். நாங்கள் கடம்பன்குளம் ரோட்டில் நின்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரி TN 67 BD 7130 என்ற ேஹாண்டா ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் பக்கவட்டில் திண்பண்டங்கள், பீடி இருந்தன. நாங்கள் அவரை அழைத்து விசாரித்த போது அவர் போலி லேபிள் ஒட்டிய செய்யது பீடியை விற்பனை செய்வதாக ஒப்புக்கொண்டார். அவர் அந்த பொருட்களை சிறு சிறு வியாபாரிகளிடம் விற்பனை செய்வதாக கூறினார். பின்னர் நாங்கள் ஆஜர் எதிரியை காவல் நிலையம அழைத்து சென்றோம். அசா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் பத்து வருடமாக செய்யது பீடி கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். நான் அசா.1 ன் கீழ் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். அசா.1 புகார மனு கொடுக்கும் போது நானும் அவருடன் இருந்தேன் என்றால் சரிதான். நான் ஜீனியர் விற்பனையாளராக இருப்பதால் ஆவியூர் கிராம பகுதியில் எவ்வளவு விற்பனை மந்தமானது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காவல் துறையினர் என்னை அன்றைய தினமே விசாரித்தார்கள் என்றால் சரிதான். அசா.1 ஐ காவல் நிலையத்திற்குள்ளே விசாரித்தார்கள் என்றால் சரிதான். பின்னர் சிறிது நேரம் கழித்து காவல் நிலைத்திற்குள் சென்று கையொப்பம் மட்டும் செய்தேன். நான் எழுதப்பட்ட ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். சம்பவத்திற்கு பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரி கொண்டு வந்த பொட்டலங்களில் என்ன இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், ஆனால் லேபிள் மட்டும் வேறு மாதிரி இருந்தது. காவல் நிலையத்திற்கு சென்ற பின்னர் தான் ஆஜர் எதிரியின் பெயர் எனக்கு தெரியும் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு எதிரி தானாகவே வந்துவிட்டார் என்றால் சரிதான். நான் அசா.1 க்கு விசுவசமாக இருப்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender Miscellaneous : **CC.No. 147 /2025**

Preliminary Register :

Sessions :

Deposition of witness for : Pw.3

Name : **முத்துகிருஷ்ணன்**
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day February of 2026

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:–**

1. நான் தற்போது கழுவன்குளத்தில் வசித்து வருகிறேன். நான் செய்யது பீடி கம்பெனியில் டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அசா.1 எனது கம்பெனியின் மேலாளர் ஆவார். அசா.2 எனது கம்பெனியின் விற்பனையாளர் ஆவார். கடந்த 11.05.2022 ம் தேதியன்று காலை சுமார் 9.00 மணியளவில் நான், அசா.1, அக்னிராஜ், அசன்னார், செந்தில்குமார் ஆகியோர்கள் ஆவியூர் அருகே விற்பனை குறைவாக இருப்பதால் அந்த பகுதியில் விசாரணை செய்ய சென்றோம். நாங்கள் கடம்பன்குளம் ரோட்டில் நின்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரி TN 67 BD 1730 என்ற ே◌ஹாண்டா ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் பக்கவட்டில் திண்பண்டங்கள், பீடி இருந்தன. நாங்கள் அவரை அழைத்து விசாரித்த போது அவர் போலி லேபிள் ஒட்டிய செய்யது பீடியை விற்பனை செய்வதாக ஒப்புக்கொண்டார். அவர் அந்த பொருட்களை சிறு சிறு வியாபாரிகளிடம் விற்பனை செய்வதாக கூறினார். பின்னர் நாங்கள் ஆஜர் எதிரியை காவல் நிலையம அழைத்து

சென்றோம். அசா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் சுமார் 4 வருடமாக செய்யது பீடி கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். நான் எதிரியை மற்ற நபர்கள் விசாரித்து கொண்டிருந்த போது சுமார் 20 மீ தூரத்தில் வண்டியில் அமர்ந்திருந்தேன் என்றால் சரிதான். நான் அசா.1 ன் கீழ் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். அசா.1 புகார் மனு கொடுக்கும் போது நானும் அவருடன் இருந்தேன் என்றால் நான் வெளியே நின்றேன் அவர் உள்ளே சென்று புகார் கொடுத்தார். எவ்வளவு விற்பனை மந்தமானது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பின்னர் சிறிது நேரம் கழித்து காவல் நிலைத்திற்குள் சென்று கையொப்பம் மட்டும் செய்தேன். நான் எழுதப்பட்ட ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். காப்புரிமை சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் போலீசாரிடம் அளித்த வாக்குமூலத்தில் எதிரியிடம் கைப்பற்றப்பட்ட 8 பண்டல்கள் போலியான பீடிகள் என்று சொன்னாலும், மேற்கண்ட எங்கள் நிறுவனத்திற்கு 28 சதவீதம் வரி ஏய்ப்பு செய்திருக்கிறார் என்ற குறிப்பிட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் அதை பற்றி எனக்கு முழுமையாக தெரியாது. நான் அசா.1 கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் எதிரி கொண்டு வந்த பொட்டலங்களை பிரித்து பார்த்தேனா என்றால் பிரித்து பார்க்கவில்லை. நான் பொட்டலங்களை பிரித்து பார்க்காததால் பீடி போல் இருப்பது என்று குறிப்பிட்டது ஏற்றுக்கொள்ளும்படி இல்லையென்றும், நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.